# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் 02.09.2026</u>**

**<u>முன்னிலை</u>**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 12395/SCIC/2025</u>**

திருமதி K. மாலதி மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
'CS' பிரிவு கண்காணிப்பாளர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை 600 028

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| **1.** | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 25.03.2025 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 25.04.225 |
| 3. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 28.05.2025 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 12.08.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 25.03.2025 தேதியிட்டு அனுப்பிய மனுவில், What is the current status of Service Request No.12333804? என்பது உள்ளிட்ட தகவல்களை 3 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. மனுதாரருக்கு பதிலாக அவரது கணவர் திரு குமரன் உரிய அனுமதி கடிதத்துடன் ஆஜரானார்.

பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகவில்லை. வழக்கானது வேறொரு தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிடப்படுகிறது. ஆணையத்திலிருந்து விசாரணை அழைப்பாணை அனுப்பப்பட்ட நிலையில், **பொதுத் தகவல் அலுவலர் எந்தவித முன்னறிவிப்புமின்றி இன்றைய விசாரணைக்கு ஆஜராகாத காரணத்தால் அவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை ஆணையத்தின் அடுத்த விசாரணையின்போது நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிது.**

3. **மனுதாரரின் 28.05.2025 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)ன் கீழான மேல்முறையீட்டு மனுவிற்கு மேல்முறையீட்டு அலுவலரால் எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை. எனவே, 28.05.2025 அன்று பொறுப்பிலிருந்த அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் திருமதி K.K. மஞ்சுளா, தற்போது துணைப்பதிவுத்துறைத்தலைவர், துணைப்பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், செங்கல்பட்டு அவர்கள் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான மேற்படி அலுவலரின் விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்படி அலுவலரிடமிருந்து பெற்று, ஆணையத்தின் அடுத்த விசாரணையின்போது சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

4. **மேலும், மனுதாரருக்கு சட்டப்பிரிவு 19(8)(b)ன் கீழ் பொது அதிகார அமைப்பால் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) இழப்பீடாக வழங்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு மேற்படி இழப்பீட்டுத் தொகையினை மனுதாரருக்கு வழங்கியதற்கான ஒப்புகை அறிக்கையினை ஆணையத்தின் அடுத்த விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12395/SCIC/2025</u>**

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**
பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
எண்.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 600 028

பொதுத் தகவல் அலுவலர்/
'CS' பிரிவு கண்காணிப்பாளர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை 600 028

திருமதி K.K. மஞ்சுளா,
துணைப்பதிவுத்துறைத்தலைவர்,
துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
செங்கல்பட்டு (முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், சென்னை)

**மனுதாரர்**
Tmt K. Malathy,
W/o M.S.Kumaran,
Flat No.8. Sundaram Homes,
87 Tank Bund Road,
Nungambakkam, Chennai 600 034

**நகல்**
பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை 600 035

TK/PS